1971 டிசம்பர் 17]

பற்றி இந்தத் துறை பரிசீலித்து வருகிறது. இதிலே புதிய ரகங்கள் இப்போது வெளியிடப்பட்டிருக்கின்றன. என்பது கனம் அங்கத்தினர் அவர்களுக்கே தெரியும்.

திரு. இ. எஸ். தியாகராசன் : தற்போது இந்தத் தொழிற்சாலை யார் நிர்வாகத்தில் இருக்கிறது? கடந்த ஆண்டு இதில் பெற்ற லாபம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லாப நஷ்டக் கணக்கு விவரம் இல்லை. கனம் அங்கத்தினர்களுக்கே தெரிந்த செய்தி—இதை நடத்த வேண்டாம், ஏலத்தில் விட்டு விடலாம் என்ற முடிவை அன்றைய நிர்வாகம் அறிவித்தது. அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அரசாங்கத்தின் பொறுப்புக்கு வந்தவுடன் ஏற்று நல்ல முறையில் நடத்தப்பட்டு வருகிறது.

ஒண்டிப்புத்தூர் அருகே இரயில்வே மேம்பாலம்

* 525 வினு—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

கோவையையடுத்த ஒண்டிப்புதூரில், திருச்சி பாதையில் உள்ள இரயில்வே லெவல் கிராசிங்கில் மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

பாசன வசதிகள்

* 526 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குளித்தலை வட்டம், சிந்தலவாடி வடிகால் வாய்க்காலில் இருந்து குழாய் மூலம் தண்ணீர் எடுத்துச்சென்று ஆயக்கட்டில் சேராத நிலங்களுக்கு பம்புசெட்டு மூலம் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு எந்த ஆண்டு முதல் இவ்வாறு பாய்ச்சப்படுகிறது?

(உ) இவைகளின் பேரில் தீர்வை ஏதேனும் வசூலிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை. சிந்தலவாடி வடிகாலின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஆயக்கட்டு நிலங்கள் கிடையாது, ஆகவே ஆயக்கட்டில் சேராத நிலங்கள் பாசனம் செய்யப்படுகின்றனவா என்ற கேள்வி எழாது.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

* 527 வினு—திரு. அ. சின்னசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செயங்கொண்டம் தொகுதியில் உள்ள தா—பழூர் ஒன்றியப் பகுதியில் நீர்ப்பாசன வசதியளிக்க மருதையாற்றுத் திட்டம் அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டதா?